1967 ஜூலை 11]

திரு. பெ. மலைச்சாமி : தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் இந்த அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பெரம்பூரில் நடத்தப்பட்ட நேரத்தில் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் அங்கு இல்லாத காரணத்தினால் இதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வேலையில்லாமல் இருக்கக்கூடிய காஞ்சீபுரத்தில் அது கூட்டுறவு முறையில் இப்போது நடக்கும்போது நஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அங்கு வேலையில்லாது இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் என்றுதான் அங்கு ஏற்படுத்தப்பட்டது. இப்போது நஷ்டத்தில்தான் அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு லாபம் வரக் கூடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் தனியார் நடத்துகின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளெல்லாம் லாபகரமாக நடத்தப்படுகின்றன. ஆகவே, தென் மாவட்டங்களில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளை அரசினர் சார்பில் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை. தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகளில் அடிக்கடி ஆபத்துகளுக்கு இரையாகும் நிலைமை இருக்கிறது.

கைக்கடிகார இயந்திரங்கள்

*166 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் கைக்கடிகார உதிரிப் பாகங்களை இணைக்கும் பிரிவுகள் எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

(இ) 1967-68-ல் மேலும் எத்தனை பிரிவுகள் எங்கெங்கு துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இம் மாநிலத்தில் கைக்கடிகாரங்கள், கடிகாரங்கள் முதலியவைகளை உற்பத்தி செய்யும் தொழிலில் அல்லது அவைகளின் உதிரிப் பாகங்களை இணைத்துக் கடிகாரம் அமைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழில்துறையுடன் சிறு அளவுத் தொழில்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்களின் பட்டியல் ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களால் உற்பத்தி

---

a 820—822ம் பக்கங்களில் I இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

செய்யப்படும் அல்லது இணைக்கப்படும் பொருள்களின் விவரமும் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைக்கடிகாரங்களின் உதிரிப் பாகங்களை இணைக்கும் பிரிவு ஏதும் அரசாங்கத் துறையில் இல்லை.

(இ) 1967-68-ல் அத்தகைய பிரிவு எதையும் அரசாங்கத் துறையில் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை. தனியார் துறையில் உள்ள அத்தகைய பிரிவுகள் குறித்துத் தகவல் ஏதுமில்லை.

Tidal Power Project

*167 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to establish a Tidal Power Project in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை, அது நிறைவேறத் தக்கதாய் இன்மையின்.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை.

THIRU T. MARTIN: May I know from the Hon. Minister whether this Government made an independent study or whether it has accepted the investigation done by the previous Government? Further, if high tide is essential for this scheme, will the Government come forward to undertake fresh investigation in places like Periathalai, Manapadi and Uvari where there are high tides which can be taken advantage of for this scheme?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இது 1964-வது ஆண்டிலே, பிரான்ஸ் நாட்டிலே கையாளப்படுகிற முறையில் இங்கு கொண்டுவரக்கூடிய முறையில் இதற்காக ஆராய்ச்சி நடத்தப்பட்டது. தமிழக மின்சாரக் கழகத்தினர் இந்த ஆராய்ச்சியைப் பரீட்சார்த்தமாகச் செய்தார்கள். அலையின் மூலம் மின்சார உற்பத்தி செய்யவேண்டுமென்றால் 25 அடி அளவிற்கு அலை எழும்பினுல்தான் அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இங்கே 3 அடி, 4 அடி அல்லது அதிகப்படியாகப் போனுல் 5 அடி அளவிற்குத்தான் அலைகள் எழும்புகின்றன. அதற்கு மேலும் அலைகள் எழும்பவேண்டுமென்றால் அதற்காக மின்சாரத்தைக் கொண்டுவந்து அதன்மூலம் எழும்ப வைக்க முடியும். அப்படி அதிகமாக அலைகள் எழும்ப வைப்பதற்குத் தேவைப்படும் மின்சாரத்தின் அளவை அளவைவிட அந்த அலைகள் எழும்புவதன் மூலம் கிடைக்கக்கூடிய மின்சாரத்தின் அளவு குறைவாக இருப்பதால் அது சாத்தியம் இல்லை என்று தெரிகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி அந்தப் பகுதிகள் எல்லாம் 25 அடிக்கு அலைகள் எழும்பக்கூடிய நிலைமை இருக்குமானுல் அதுபற்றி அங்கே ஆராயப்படும்.